2013 மார்ச் 25]

அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கல்லூரி விடுதி அறைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவற்றை சீரமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

51—

குளிர்ப்பதனக் கிடங்கு

***4439—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் மிளகாய் மற்றும் உணவுத் தானியங்களுக்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011–2012–ன்கீழ் விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் மிளகாய் வற்றல் மற்றும் காய்கறிகளுக்கென 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிப்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுற்று, தற்போது மின் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முழுமையாக முடிவுற்றதும், இக்கிடங்கு,

விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். பொதுவாக, தானியங்கள், குளிர்ப் பதனக் கிடங்கில் சேமிக்கப்படாததால் அதற்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருப்பதைக் கொடுப்பவர் வள்ளல். இல்லாததையும், இயன்றதையும், முடியாததையும், வருண மழையே இல்லாத இந்தக் காலக்கட்டத்திலும், டெல்டா பகுதிகளில் 3 போகமும் விளையாத இந்த நேரத்திலும், தமிழக மக்களுக்கெல்லாம், அரிசி வாங்குகிற, ரேஷன் அட்டை பெற்றிருக்கிற அத்தனை பேருக்குமே, 20 கிலோ அரிசியை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மனித தெய்வம், இல்லாததைக் கொடுக்கும் தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடமாடுகிற மனித தெய்வமாக நமக்கெல்லாம் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அம்மா அவர்களை வணங்கி, தமிழகத்திலே மிக அதிகமாக மிளகாய் விளைகிற விளாத்தி குளத்தில்தான் ஏறக்குறைய 1 இலட்சம் ஏக்கருக்குமேல் மானாவாரியாக மிளகாய் பயிரிடப்படுகிறது. அந்த இடத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு, 100 இலட்சம் ரூபாய் செலவில், மிளகாய் வற்றல் பதனிடக்கூடிய குளிர்ப்பதனக் கிடங்கை அமைத்திருக்கிறார்கள். விரைவில் அது பயன்பாட்டுக்கு வர இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன செய்திக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய மக்கள் மிகவும் அதிகமாகப் பயன்பெறுகிற அந்த இடத்தின் அருகில் துறைமுகமும் இருக்கிறது. 50 கிலோ மீட்டர் பகுதியில் அமைந்துள்ள அந்தத் துறைமுகப் பகுதியிலிருந்து ஏற்றுமதிக்குப் பயன்படுகிற அளவில், மிக விரிவான, மிகப்பெரிய ஒரு குளிர்ப்பதனக் கிடங்கை அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.*

2013 மார்ச் 25]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே காய்கறிகளின் வரத்து எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்து, தேவை இருப்பின், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

சொந்தக் கட்டடம்

***1170—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது ரூ.2,000 மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு நிலம் அல்லது புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தர மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அடிமனை ஒதுக்கீடு செய்யப்பட்டபின், இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.